**பதவிய பிரதேச சபை - 2023**
---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதவிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பதவியபிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா.828,333 ஆக காணப்பட்டிருந்தது இருப்பினும் முற்றடங்கல் வருமான கூற்றில் அது ரூபா.733,000 ஆகக் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் முத்திரைத் தீர்வை வருமான நிலுவை ரூபா.1,344,833 ஆக காணப்பட்ட போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா.749,500 ஆகக் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2023 திசெம்பர் 31 வரையான உழவு இயந்திர வருமானம் ரூபா.694,000 ஆக காணப்பட்டிருந்தது இருப்பினும் முற்றடங்கல் வருமான கூற்றில் அது ரூபா.378,500 ஆகக் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மட்டக்குளியிலிருந்து பிரதேச சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மீன்பிடி படகுகளை கொண்டு செல்வதற்காக பெறப்பட்ட ரூபா.290,000 மீளாய்வாண்டில் முற்றடங்கல் வருமான கூற்றில் மீண்டெழும் மாற்றல்கள் மற்றும் மூலதன மாற்றல்களாக இரண்டு தடவைகள் கணக்கீடு | -மேற்படி- | -மேற்படி- |

செய்யப்பட்டிருந்தமையால் மூலதன மாற்றல்கள் பெறுகை ரூபா.290,000 கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் ரூபா.215,200 ஆக காணப்பட்ட போதிலும் முற்றடங்கல் வருமான கூற்றில் அது ரூபா.180,450 ஆகக் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | மூடப்பட்ட வணிகங்களின் பதிவு நீக்கப்பட்டமையினால் வேறுபாடு காணப்படுகின்றது. | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட தொழிற்துறை வரிகள் ரூபா.157,200 ஆக காணப்பட்ட போதிலும் முற்றடங்கல் வருமான கூற்றில் அது ரூபா.86,000 ஆகக் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வர்த்தக வரிகள் ரூபா.1,571,000 ஆக காணப்பட்ட போதிலும் அது முற்றடங்கல் வருமான கூற்றில் அது ரூபா.1,414,530 ஆகக் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் முற்றடங்கல் வருமான கூற்றின் படி 03 செலவினங்களின் பெறுமதி ரூபா.1,219,429 ஆக காணப்பட்ட போதிலும் செலவின பட்டியலின்படி பெறுமதி ரூபா.960,167 ஆக காணப்பட்டது இதன்படி ரூபா.259,262 வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | பட்டியல்கள் தொடர்புடைய பதிவேடுகளுடன் இணக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | பெறுமதி ரூபா. | சமர்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெறவேண்டிய அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 48,000 | i. விரிவான பட்டியல்<br>ii. கால பகுப்பாய்வு | கால பகுப்பாய்வுடன் விரிவான பட்டியல் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | எழுத்து மூலமான ஒப்பாய்வு ஆவணம் சமர்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| பெறவேண்டிய தொழிற்துறை வரிகள் | 44,400 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| பெறவேண்டிய வர்த்தக வரிகள் | 597,400 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,023,366 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,023,369 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்படட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 2,000,200 | 1,710,630 | 1,673,830 | 641,800 | 1,655,600 | 1,495,450 | 1,533,900 | 605,000 |
| (ii) | வாடகை | 11,881,400 | 4,744,337 | 4,737,687 | 455,250 | 6,391,400 | 3,899,085 | 3,465,685 | 448,600 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 5,108,800 | 1,558,349 | 1,724,991 | 48,000 | 3,367,500 | 1,864,352 | 1,692,960 | 214,642 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,893,600 | 9,302,156 | 8,139,874 | 2,539,777 | 8,742,500 | 7,822,602 | 7,697,834 | 1,377,495 |
| | **மொத்தம்** | 35,884,000 | 17,315,472 | 16,276,382 | 3,684,827 | 20,157,000 | 15,081,489 | **14,390,379** | **2,645,737** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை தொழிற் துறை வரி ரூபா.597,400 மற்றும் வர்த்தக வரி ரூபா.44,400 சேகரிக்கப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 இல் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் பிரதேச சபை சொந்தமான ஜேசிபி இயந்திரத்தினை வாடகைக்கு விடப்பட்டமையால் நிலுவை வாடகை பெறுமதி ரூபா.426,250 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2024 இல் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரங்கள் கட்டணங்கள் ரூபா.48,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஈ) ஏனைய வருமானம்** | | |
| (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நீர் கட்டணங்கள் ரூபா.117,626 மற்றும் நீர் இணைப்புக் கட்டணங்கள் ரூபா.25,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2024 இல் நிலுவைகளை அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது | -மேற்படி- |
| (ii) 31 திசெம்பர் 2023 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,044,197 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.742,500 அறவிடப்பட்டிருக்கவில்லை மற்றும் 2022, 2023 ஆம் வருடங்களுக்கான முத்திரை கட்டணங்கள் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.600,454 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.7,000 ஆகியன 2024 பெப்ரவரி இல் அறவிடப்பட்டுள்ளது மிகுதப்பணம் எதிர்காலத்தில் அறவிடப்படவுள்ளது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயற்றிறன்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் காணப்படுகின்ற 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் 2023 திசெம்பர் 31 வரை அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட உப விதிகள் பின்பற்றப்படவுள்ளது. | உப விதிகள் உருவாக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் பிரதேச சபையின் எல்லைகுள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | வருடாந்தம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு. கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 செப்தம்பர் தொடக்கம் திசெம்பர் வரையான 04 மாத காலப்பகுதிக்கு பொறப்பட்ட எரிபொருள் தொடரபாக செலுத்தப்பட வேண்டிய ரூபா.2,262,620 இற்கான கொடுப்பனவு தொடரபான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தவனை முறை அடிப்படையில் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன். | தவனை முறை அடிப்படையிலாவது செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2021 மற்றும் 2022 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் | கூடிய விரைவில் கட்டணங்கள் செலுத்தி முடிக்கப்படும். | கட்டணங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.319,185 செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 02 தொடக்கம் 08 வருடங்களாக இருந்து உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து பெறப்பட வேண்டிய கடன் நிலுவைகள் ரூபா. 2,490,958 மற்றும் செலுத்தவேண்டிய கடன் நிலுவைகள் ரூபா. 5,519,377 தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2015 ஆண்டு தொடக்கம் நிலுவையாகவுள்ள இத் தொகை தொடர்பாக விபரமான அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | இதனை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா.5,834,450 செலவிடப்பட்டு 34 மீன்பிடி படகுகள் வருமானம் ஈட்டும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 30 மீன்பிடி படகுகள் வருமானம் ஈட்டுவதற்கு பயன்படுத்தப்படாது பிரதேச சபை வளாகத்தில் விளைவற்று காணப்படுகின்றது. | படகுகளுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகை செலுத்துவதற்கு மீனவர்கள் சம்மதம் தெரிவிக்காமையினால் படகுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது, நிர்வாக குழு ஊடக முடிவெடுக்கப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்கான இருப்புகள் கணக்கெடுப்பின்போது ஒப்பாய்வு சபையினால் அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பழுதடைந்த கப் வாகனம், மோட்டார் சைக்கிள், கான்டிராக்டர் மற்றும் கொங்றீட் கலவை இயந்திரம் ஆகியன தொடர்பாக இயந்திர பொறியியலாளரின் பரிந்துரை கிடைக்கப்பெறாமையினால் அவை அகற்றப்பட்டிருக்கவில்லை. | இயந்திர பொறியியலாளர் அறிக்கை பெறப்பட்டு அவற்றினை அகற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |